# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-13 | February - 2024 | Issue-09

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-




## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!
இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில்
அனைவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.

2024ம் ஆண்டின் 2வது மாதத்தை காண கிருபை செய்த நம் கர்த்தாதி கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். இந்த மாதம் முழுவதுமாக தேவகிருபை பரிபூரணமாக நமக்கு அருளப்பட மன்றாடி ஜெபிப்போம்.

நம் தாய்நாடான இந்தியா, இவ்வாண்டின் முதற்பாதியில் பாராளுமன்ற தேர்தலை சந்திக்கிறது அனைத்து மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபடும் தலைவர்கள் ஆட்சிக்கு வர ஜெபித்திட, உழைத்திட, போராட நம்மை அர்ப்பணிப்போம். இனவெறி, மதவெறி மற்றும் வன்முறைக்கு துணைபோகும் அரசியல் தலைவர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

தமிழ்நாட்டில் பரவிவரும் விஷ-வைரஸ் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட, கொரோனா தொற்று மீண்டும் வராதிருக்க ஜெபத்துடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

'ஜெப-ஜன்னல்' - ஜெப நேரங்கள் (பிப்ரவரி 9, 16, 23), 'அனைவரும்-ஊழியத்தில்' - கைபிரதி ஊழிய திட்டம், இரட்சிப்பு வேதாகம போட்டிகள் ஆகியவற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நம் இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம்: பக்கம் 18-ல் தரப்பட்டுள்ளது).

தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-158** **ஆதியாகமம் - 3:19**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையாலே அப்பம் பெறக்கடவாய்; அதேனெனில், அதில் எடுக்கப்பட்டாய். ஏனென்றால், நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய். | நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| நீ மண்ணிலிருந்து எடுக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய். நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய். | உன் முகம் வேர்வையால் நிறையும்படி கஷ்டப்பட்டு, நீ மரிக்கும்வரை உழைத்து உனது உணவை உண்பாய். உன்னை மண்ணால் உருவாக்கினேன்; நீ மரிக்கும் போது மீண்டும் மண்ணுக்கே திரும்புவாய். |

வசன தியானம்-148

# தவக்காலத்தில்

## கடவுளின் கிருபையை மன்றாடிப் பெறுவோம்

Gen-3:19 ஆதி-3:19

நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்; இதை நினைவில் கொள். ஆதி-3:19
கர்த்ருடைய கிருபை ஒருபோதும் உன்னைவிட்டு விலகாது. ஏசா-54:10

அன்று 'சாம்பல் புதன்' மக்கள் பிரதான ஆலயத்தில் பாவங்களை அறிக்கையிட்டனர்; பாவமன்னிப்பின் உறுதியும் வழங்கப்பட்டது. பின்னர் குருத்தோலைச் சாம்பல் உள்ள கோப்பையை ஆயர் கையில் எடுத்தார்.

முதலில் ஒரு பெண் வந்தாள். ஆயர், சாம்பலால் அவள் நெற்றியில் கருஞ்சிலுவை வரைந்து, ''நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்பதை நினைவில்கொள், ஆனாலும், கர்த்தருடைய கிருபை ஒருபோதும் உன்னைவிட்டு விலகாது.'' என மெல்லிய குரலில் சொன்னார். அடுத்து, முதியவர் ஒருவர் வந்தார். அவருக்கு சாம்பல்-சிலுவை வரைந்த ஆயர், ''நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்பதை நினைவில் கொள், ஆனாலும், கர்த்தருடைய கிருபை ஒருபோதும் உன்னைவிட்டு விலகாது.'' என்றார்.

அதைத் தொடர்ந்து ஒரு வாலிபன், ஒரு இளம்பெண் என, ஆல்டர் முன் வந்த ஒவ்வொருவருக்கும் சாம்பல்-சிலுவை வரைந்து, ''நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்பதை நினைவில் கொள், ஆனாலும், ''கர்த்ருடைய கிருபை ஒருபோதும் உன்னைவிட்டு விலகாது.'' என மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டே இருக்கிறார் அந்த ஆயர்.

கடைசியாக வந்த பெண், தனக்கு அநீதி இழைத்தவர்கள் மீது வெறுப்பும், கோபமும் உண்டு என்றாள். அந்தப் பெண்ணின் நெற்றியில் கருஞ்சிலுவை வரைந்த ஆயர், ''நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்பதை நினைவில் கொள், ஆனாலும், ''கர்த்ருடைய கிருபை ஒருபோதும் உன்னைவிட்டு விலகாது.'' என்றார். மீண்டும், மீண்டும் அதையே திருப்பிச் சொல்கிறார். ''நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்; ஆனால், ''கர்த்தரின் கிருபை ஒருபோதும் உன்னைவிட்டு விலகாது.'' என சொல்லிக்கொண்டே இருக்கிறார். நாம் கூட ஜெபிக்க, பாவ-அறிக்கை செய்ய, திருமைறை படிக்க மறந்துபோகிறோம். ஆகவே, கடவுளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக, நமது பாவங்கள், சாபங்கள், அடிமைத்தனங்களின் நடுவே கடவுளின் கிருபை நமக்குத் தேவை என்பதை உணர் வோம். அந்த கிருபையை மீண்டும்-மீண்டும் பெறும் உறுதியை நாம் கொண்டிருப்பது அவசியம். தவக்காலத்தின் 40நாட்களிலும் தொடர் மன்றாட்டில் மீண்டும்-மீண்டும ஈடுபட சங்கீதம்-143 நமக்கு ஊக்கமளிக்கிறது. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.


REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதி வு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

தபசுக்காலம் சிறப்பு தேவசெய்தி...




# புதுவாழ்வு துளிர்விட இயேசுவுடன் 40 நாட்கள்

## The Lent Season - 2024

**Rev. D. Gnanapal M.Sc.,B.D**
PRESBYTER-IN-CHARGAE AND CHAIRMAN
CSI KARUVANTHA PASTGORATE, TIRUNELVELI DIOCESE, KARUVANTHA, TENKASI DISTRICT

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் அவருடைய அன்பினாலும், கிருபையினாலும் இந்த 2024 வருடத்திலும் லெந்து என்னும் காலங்களில் பிரவேசிக்க தேவன் உதவி செய்திருக்கிறார். இதை வாசிக்கிற உங்கள் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்தவ நல்வாழத்துக்களை மிகுந்த மனமகிழ்சியோடும், கிறிஸ்து உயிரோடு இருக்கிறார் என்கிற நம்பிக்கையோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முந்தின நாற்பது நாட்கள் (ஞாயிறு தவிர்த்து) ‘லெந்து நாட்கள்’ அல்லது ‘தபசு-காலம்’ என்று அழைக்கப்படுகின்றன. இந்த நாட்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பட்ட பாடுகளுக்காக வெறும் பக்தியை காட்டும் காலம் மாத்திரம் அல்ல மாறாக, கிறிஸ்துவின் பாடுகளுக்கும் வேதனைகளுக்கும் காரணமான நமது பாவங் களுக்காக உண்மையாகவே மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பும் நாட்கள் (Days of self-examination and repentence) ஆகும்.

‘லெந்து’ என்னும் வார்த்தையின் பொருள் வசந்தகாலம் அல்லது துளிர்விடும் காலம் என்பதாகும். வெளியிலுள்ள மரங்களைக் கவனித்துப் பாருங்கள்! இலையுதிர் காலத்தில் தனக்குத் தேவையில்லாத இலைகளை உதிர்த்து பட்டுப்போன நிலையில் இருக்கின்ற மரங்கள் வசந்த காலத்தில் மீண்டும் துளிர்விட்டு, புதிய இலைகளுடன் செழிப்பாக காணப்படும். புல் பூண்டுகளும் வசந்த காலத்தில் முளைத்து பூமியை செழிப்பாகக் காட்டுகிறது.

இதைப்போன்று நமது சிந்தனையில், பார்வையில், வார்த்தையில், செயலில் தூய்மையுடன் காணப்பட, இருதயத்தில் இருக்கும் தேவையற்ற பாவங்களை உதறித் தள்ளிவிட்டு, புதிய மனிதனாக, மனுஷியாக மாறிவாழ சிலுவையில்

அறையுண்டு மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு இந்த வருடம் நமக்குத் தரும் காலம்தான் இந்த லெந்து காலம். நம் வாழ்வில் சுகவாழ்வு துளிர்க்கும் ஒரு நல்லகாலம் இதுவே, என்றால் அது மிகையாகாது.

''என் மீறுதல்களை நான் அறிந்திருக்கின்றேன். என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவம் செய்து உமது கண்களுக்கு முன்பாக பொல்லாங்கானதை நடப்பித்தேன்'' (சங்-51:3,4) என்று தாவீது தனது பாவங்களுக்காக புலம்பினது போல, நாமும் நமது பாவங்களை உணர்ந்து அவைகளினின்று விடுவிக்கப்பட்டவர்களாகவும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவும், ஆசீர்வதிக்கபட்டவர்களாகவும், இரட்சிப்பின் சந்தோசத்தை பெற்றவர்களாகவும் கல்வாரி சிலுவையின் வழியாக இயேசு கிறிஸ்து நமக்குத் தந்த வெற்றியுள்ள நிறைவாழ்வு வாழ நம்மை அர்ப்பணிக்கும் காலமே, இந்த லெந்து காலம். எனவே, இந்த 40 நாட்களை உங்கள் வாழ்வில் பாவமன்னிப்பு பெறும் கிருபையின் காலம் என்று எண்ணுங்கள்.

அன்பானவர்களே! நம் நிறைவாழ்வு துளிர்விடும் வகையில் இந்த 40 நாட்களையும் கிறிஸ்துவுடன் செலவிடுவதற்கான சில வழிமுறைகளை வேதவசனங்களின் துணைகொண்டு சற்றே தியானிப்போம்.

**1. உபவாச நாட்களை நியமியுங்கள்: யோவேல் 1:14**

(Schedule a time to fast - take part in church services & fasting fellowships)

யோவேல்-1:14ம் வசனத்தில் கர்த்தர் யோவேல் தீர்ககதரிசியின் மூலமாக நமக்குச் சொல்லுவது, ''பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பை கூறுங்கள், மூப்பரையும் தேசத்தின் எல்லாக்குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்'' என்பதாகும். இந்த வசனத்தின்படி அவரவர்கள் தங்களுக்கென்று உபவாச நாளை கட்டாயம் நியமித்துக்கொள்ளுங்கள், திருச்சபையின் அனைத்து குடும்பங்களிலும் ஆலயத்திற்கு வராமல் இருக்கிற சிறுவர்கள், வாலிபர்கள், முதியோர்களை அன்போடு ஆலயத்திற்கு ஆண்டவர் அழைக்கின்றார்.

இவ்வாண்டின் தவக்காலம் தேவன் நமக்குத் தந்த கிருபையின் காலம் என்பதை உணர்ந்து விசுவாசித்து இயேசவினிடமாய் மனந்திரும்புவோம்.

**2. புதுவாழ்வு பெறுங்கள்**

(Inherit the New Life - be a New creation)

புதுப்படைப்பு குறித்து எழுதிய அப்போஸ்தலனாகிய பவுல் இன்று நமக்கும் அதையே வலியுருத்துகிறார். ''ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின'' (2கொரி-5:17) என்ற வசனத்தின்படி, வசந்த காலத்தில் மரங்கள் எவ்வாறு தேவையற்ற இலைகளை உதிர்த்து புதிய இலைகளை துளிர்விடச் செய்கின்றனவோ அப்படியே நாமும், நாம் அறியாத வகையில் நம் உள்ளத்துக்குள் ஒட்டிகொண்டு வளர்ந்து கொண்டிருக்கும் ஒட்டுண்ணிகளாகிய பெருமை, பேராசை, இச்சை, பொறாமை,

சாப்பாட்டு பிரியம், கடுங்கோவம், சோம்பறித்தனம் (Seven deadly sins) ஆகிய 7கொடிய பாவங்களை உதறித் தள்ளிவிட்டு அன்பு சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சயைடக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய ஆவிக்குரிய வாழ்வை (Fruit of Spirit) பெற்றுக் கொள்ள முயற்சி எடுங்கள்,

தேவன்தாமே உங்களுக்குள் சுத்த இருதயத்தை சிருஷ்டித்து நிலைவரமான ஆவியை உங்களில் புதுபித்துக்கொடுப்பாராக.

**3. தேவ பெலனைப் பெறுங்கள்:** 1கொரி-1:18

(Receive the Power of God - Meditate upon the Cross of Christ)

தேவ பெலனைப் பெற்றுக்கொள்ள நமக்கு வழிகாட்டும் திருமறை வசனம், ‘‘சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமா யிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ, அது தேவ பெலனாயிருக்கிறது’’ (1கொரி-1:18). ஆகையால் சிலுவையைப் பற்றிய உபதேசங்களை, இயேசுவின் பாடு, மரணம், உயித்தெழுதல், பாவத்தை உணத்தும் சிலுவைக்காட்சிகள் குறித்த உபதேசங்களை கேட்க வாருங்கள், விரும்புங்கள்.

நீங்கள் ஆலய ஆராதனைக்கு (church service) செல்வதை, வேத-பாட வகுப்பு களுக்கு (Bible study) செல்வதை, மன்றாட்டு ஜெபங்களில் (Litany-Intercession) ஈடுபடுவதை, சிலுவை தியானக் கூட்டங்களில் (Cross meditation) பங்குபெறு வதை, எழுப்புதல் கூட்டங்களில் (Revival convention) பங்குபெறுவதைக் குறித்து பலர் குறைசொல்லி, விமர்சித்து, கேலி-பேசி உங்களுடைய ‘பரிசுத்தத்தை’ பரிகசிக்கும்போது ஒன்றை மறந்துபோகாதீர்கள். கெட்டுப்போகிறவர்களான அவர்க ளுடைய கண்களுக்கு முன்பாக நாம் கேலிப்பொருள்தான்; ஆனாலும், சிலுவைத் தியாகத்தால் மீட்கப்பட்ட நமக்கோ அது கடவுள் தருகிற ‘உன்னத’ பெலனா யிருக்கிறது என்பதையே பவுல் இவ்வசனத்தில் நமக்குத் தெளிவாக்குகிறார்.


கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இந்த லெந்து நாட்களில் நாம் ஜெபம், உபவாசம், தான-தர்மம், ஆலய ஆராதனை, திருமறைத் தியானம், சுய-வெறுப்பு, சுய-பரிசோதனை, பாவ-அறிக்கை, மனந்திரும்புதல் ஆகிய செயல்பாடுகள் வழியாய் நம்மை புதுப்பித்துக்கொண்டு கிறிஸ்துவுக்குள் புதுப்படைப்பாக மாறுவோம்.

கடவுள் அருளும் புதுவாழ்வாம் நிறைவாழ்வின் நிச்சயத்துடன் கிறிஸ்துவின் இரத்தம், சிலுவைத் தியாகம், கடவுளுடைய வார்த்தை ஆகிய வற்றின் வல்லமையை உணர்ந்துகொள்வோம். ஆண்டவர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு. டி. ஞானப்பால்**


அருட்திரு. டி. ஞானப்பால், ஆயர் மற்றும் சேகரத்தலைவர், சி.எஸ்.ஐ. கருவந்தா சேகரம், திருநெல்வேலி பேராயம், தென்காசி மாவட்டம், தமிழ்நாடு, தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 81



# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan




Rev. Dr. சுரேஷ் ராஜன்

## சங்கீதம் – 81

EPISODE-81

**ஆதார ஜெப வசனம்:** தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம். 7. சேனைகளின் தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம். 19. சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும்; உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம். சங்கீதம்–81:3,7,19.

**முன்னுரை:-** இந்த சங்கீதம் ஒரு 'பண்டிகையின் பாடல்' ஆகும். இது ஒரு 'மறு-அர்ப்பணப் பாடல்' எனவும் வர்ணிக்கப்படுகிறது. இஸ்ரவேல் மக்களின் பண்டிகை நாட்களில், இறைவனுக்குத் தங்களை மறுபடியும் அர்ப்பணிக்கும் வடிவில் இப்பாடல் இயற்றப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

**1. ஆர்ப்பரிக்க அழைப்பு:- (வசனங்கள் 1, 2, 3, 4, 5)**

கடவுளுடைய பிள்ளைகள் மனமகிழ்ச்சியுடன் அவரைத் துதித்துப் போற்ற அழைக்கப்படுகிறார்கள் (வச-1). மற்றும் ஒரு சங்கீதத்தில், ''பூமியின் குடிகளே எல்லாரும் கர்த்தரை கெம்பீரமாய்ப் பாடுங்கள், மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்'' (சங்-100:1,2) என்றும், வெறொரு சங்கீதத்தில், ''கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள். துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம். (சங்-95:1,2) என்றும் சொல்லி கடவுளைத் துதிக்க மக்கள் அழைக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் இறைவனை இவ்வாறாக மனமகிழ்ச்சியுடன், அவர் செய்த நன்மைகளை நினைத்து அவரைக் கொண்டாட வேண்டும். விசேஷமாக, குறிக்கப்பட்ட பண்டிகை நாட்களில் இசைக்கருவிகளோடும் பாடகர் குழுவின் பாடல்களோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்பது அவர்களுக்கு தேவகட்டளையாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் இறைவனை போற்றிப் புகழ்ந்து ஆராதிக்கும் நமது 'ஆராதனை-வேளை' உண்மையாகவே மனதின் ஆழத்திலிருந்து மனமகிழ்ச்சியுடனும் களிப்புடனும்

கடவுளின் பிரசன்னத்தைக் கொண்டாடும் தருணங்களாக உள்ளனவா என்பதை ஆராய்ந்து பார்க்க இன்று நாம் அழைக்கப்படுகிறோம்.

**2. தப்புவிக்கும் தேவன்:- (வசனங்கள் 5, 6, 7)**

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் தத்தளித்தபோது, தேவன் அவர்களை அற்புதவிதமாய்த் தப்புவித்ததை நினைவுகூர்ந்து சங்கீதக்காரர் இப்பாடலின் குறிப்பிட்ட வசனங்களை எழுதியுள்ளார்.

கர்த்தர், தமது ஜனங்களில் தாழ்ச்சியை, தத்தளிப்பைப் பார்த்து அவர்களைத் தப்புவிக்கும் தேவனானவர். ‘‘நெருக்கத்தில் நீ என்னைக் கூப்பிட்டாய்; நான் உன்னைத் தப்புவித்தேன்’’ (வச-7) என்று மனதுருகிச் சொல்லும் அவருடைய குரலை வெளிப்படுத்தும் பாடலாக இது அமைக்கப்பட்டுள்ளது.

ஆண்டவர் எத்தனையோ முறை நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்துள்ளார். பார்வோனின் சேனைகள் தேவஜனங்களைத் துரத்திவந்த போது அவர்களைத் தப்புவித்தது முதல் மேரிபாவில் தமது தாசனாகிய மோசேயின் மூலமாக தவிக்கும் ஜனத்துக்கு தண்ணீர் கொடுத்தது வரை செய்த அற்புத அதிசயங்களைப்போல் நம் வாழ்வின் பல சூழ்நிலைகளிலுங்கூட நம் தேவைகளை அற்புத விதமாய் சந்தித்திருக்கிறார் அல்லவா?

மட்டுமல்ல, ‘‘எகிப்து தேசத்தில் இருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்’’ (மீகா-7:15) என்று தீர்க்கத்தரிசியின் மூலமாய் நமக்கு வாக்குத்தத்தம் தந்து, நம்மை நமது எதிரிகளின் பிடியிலிருந்தும், பிரச்சனைகளின் தாக்கத்திலிருந்தும் தப்புவிக்கும் இறைவன் அவரே. அவரை நாம் உறுதியாய் பற்றிக்கொள்ளும்போது தமது கிருபையையும் சமாதானத்தையும் நமக்கு அருளி நம்மை பாதுகாத்து வழிநடத்துவார் (ஏசா-26:3).

**3. மனந்திரும்ப அழைக்கும் தேவன்:- (வசனங்கள் 8, 9, 10, 11, 12, 13)**

‘‘இஸ்ரவேலே நீ எனக்குச் செவிகொடுத்தால் நலமாயிருக்கும்’’ (வச-8). ‘‘இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்’’ (வச-13) என்று சொல்லும் ஆண்டவரின் அங்கலாய்ப்பை நாம் இவ்வசனங்களில் காண்கிறோம்.

கடவுள் நம் வாழ்வில் பல தொடர்-நன்மைகளைச் செய்துவருகிறார்; இன்னமும் நன்மை செய்ய ஆவலுடன் இருக்கிறார். ‘‘உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே; உன் வாயை விரிவாய் திற, நான் அதை நிரப்புவேன்’’ (வச-16) என்கிறார் அவர்.

ஆகையால் நாம், நம் முழு இருதயத்தோடும் அவரிடத்திற்கு மனந்திரும்பி, அவரை மாத்திரமே அண்டிக்கொள்ள வேண்டும் என உங்களை வலியுறுத்த நான் விரும்புகிறேன். நம் வாழ்வை முழுவதுமாக கடவுளுக்கு அர்ப்பணிப்போமா?

**முடிவுரை:-**

அன்பர்களே! நம்மை அன்புடன் ஆதரித்து நேசித்து போஷித்து வழிநடத்தும் ஆண்டவரை முழு-மனதோடும், முழு-இருதயத்தோடும் சேவிப்போம். அவரிடமாய்த்

திரும்பி, அவரையே மனமகிழ்ச்சியோடு ஆராதிப்போம். ‘‘நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்களுடைய சத்துருக்களுக்கு எதிராகத் திருப்புவேன்’’ (வச-14) ‘‘உசிதமான கோதுமையினால் அவர்களை போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்’’ (வச-16) என்று வாக்குரைத்த தேவாதி தேவன்தாமே உங்களை ஆசீர்வதித்துக் காத்து வழிநடத்துவாராக. ஆமென்.

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

**Good Tidings Bible-Prints Ministries**

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்**

**Good Seeds - Gospel Tracts**

**நல்ல விதைகள் - கைபிரதிகள்**

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்திப்பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள். கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. கைப்பிரதிகளை எங்களிடம் பெற்று ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

## ‘அனைவரும் ஊழியத்தில்’

ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

**இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு**

1. இத்திட்டத்தில் பங்குபெற, உங்கள் தபால் முகவரியை **கடிதம்** அல்லது **வாடஸ்-அப்-ல்** எமக்கு அனுப்பவேண்டும். (எமது முகவரி - வாட்ஸ்-ஆப் எண் பக்கம்-18ல்).

2. முகவரி கிடைத்தவுடன் தங்களுக்கு 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், குப்பை-வண்டிக்காரர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். கைப்பிரதிகளை வெளியூரில் வாழும் இயேசுவை அறியாத உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தபால்-உறையில் அனுப்பி வைக்கலாம்.

3. கைப்பிரதிகள் தீர்ந்தவுடன் விருப்பம் தெரிவித்தால் மீண்டும் 30-கைப்பிரதிகளை உங்களுக்கு அனுப்பிவைப்போம். இத்திட்டத்தில் இணைந்து நற்செய்தி பரவ உதவிடுங்கள்.

கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இக்கைப்பிரதிகளை வழங்குவதைத் தவிர்க்கவும்.

# வேதாகம போட்டி–159 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா ஜாண் CBE
12) அனிதா மோகன்ராஜ் ERO
13) அரோமா சாத்ராக் TIN
14) ஆர்தர் மாசில்லாமணி CHE
15) அருள்செல்வி VIR
16) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
17) பாமா மாதவன் KAL-AP
18) பெல்சி தங்கராஜ் CHE
19) பெனிட்டா பிராங்க்ளின் CHE
20) பியூலா அலெக்ஸ் CHE
21) பியூலா ஜேசுராஜன் PON
22) செலினா பென்சி வில்சன் DR, KUW
23) சந்திராபாய் மாசிலாமணி AVD
24) சந்திரலேகா KAL-AP
25) சந்திரா மேரி விஜயன் BAN
26) சந்திரா சாமுவேல் TIN
27) சார்லஸ் ஃபின்னி DR CHE
28) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
29) சார்லட் டேவிட் CHE
30) சிட்டி TR. TVR
31) கிறிஸ்டல் ஜாய் யோபு CKA-TPT
32) கிறிஸ்துதாஸ் GOP
33) கிறிஸ்டி ஆயீட்டஸ் MAR
34) கிறிஸ்டி ஞானராஜ் CHE
35) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் TUT
36) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
37) டெய்ஸி ஜெபதாஸ் TCY
38) டெய்ஸி சாம் KAL-AP
39) டேனியல் தாமஸ் TIN
40) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
41) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
42) தெபோராள் ஆனந்தமணி TUT
43) டெல்வின் இம்மானுவேல் CBE
44) தேவமணி ஆபிரகாம் TUT
45) தேவநேசம் ராஜாசிங் CHE
46) டோராபாய் CHE
47) எலிசபெத் செல்லத்துரை CHE
48) எமிமாள் மில்டன் CHE
49) எமிமாள் சாமுவேல் (ஜெஸிக்கா) MDU
50) எஸ்தர் D.R. TIN
51) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
52) குளோரி ரவீந்திரன் TIN
53) ஞானம் ஜெபராஜ் TIN
54) ஞானம் பிலிப் CHE
55) ஞானராணி G. TVL
56) ஞானசுந்தரி நாகராஜன் TIN
57) கோல்டா ஜேசுபாதம் MUM
58) கிரேஸ் டேனி TEN
59) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
60) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
61) கிரேஸ்லின் சாந்தி TIN
62) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
63) கிரேனா அன்புரோஸ் CHE
64) கிரேஸியா ஜெயபால் CHE
65) கிரிசெல்டா செய்லர் CHE
66) ஹெலன் ஜான்சிராணி TIN
67) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
68) ஹெலன் திலக் TUT
69) ஹேமா அஜீத் CHE
70) ஹேமா கேப்ரியேல் BAN
71) ஹெப்சி அசரியா PON
72) ஹெப்சிபா மங்களராஜ் TIN
73) ஹிம்லா ராஜகுமாரி CHE
74) இளவரசி ஜோபிதா CBE
75) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
76) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
77) ஜமீலா செல்வராஜ் CHE
78) ஜேன் தர்மராஜ் MAR
79) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
80) ஜான்ஸி சந்தியா MKM

81) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
82) ஜெபா ஜெயராஜ் AVD
83) ஜெபக்குட்டி மோசஸ் TIN
84) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
85) ஜெபசீலி கிளின்டன் CHE
86) ஜெபா சீனி MAR TIN
87) ஜெபஸ்டின் G. TIN
88) ஜீவா டேவிட் சாலோமோன் APM-TEN
89) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
90) ஜெமீலா நிக்ஸன் CHE
91) ஜெனிலா CHE
92) ஜென்ஸி ஞானேஷ் MUM-MS
93) ஜெனித்தா செல்வின் TIN
94) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் DHA
95) ஜெரின் ஸ்டீபன் MUM
96) ஜெஸி செல்லதுரை CBE
97) ஜெஸி ஜெயக்குமார் TIN
98) ஜெயா ஆல்பர்ட் KUM
99) ஜோனா ஸ்டீபன் AVD
100) ஜாய்ஸ் பாண்டியன் CHE
101) ஜோஸ்பின் ஜெஸி CHE
102) ஜுலியட் ஜெபா CHE
103) ஜுலியட் ஜெயக்குமார் TIN
104) கலா கிருபாகரன் TIN
105) கலையரசி செல்வராஜ் CHE
1064) கஸ்தூரி எலியாஸ் TIN
107) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
108) லதா மைக்கேல்ராஜ் CHE
109) லலிதா TIN
110) லீலா டேவிட் CHE
111) லீலா ஜோஸப் CBE
112) லீனா எலிசபெத் CKA-TPT
113) லில்லி ஜாண்ஸன் CHE
114) லிஸி டென்சிங் TIN
115) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
116) மல்லிகா V. CHE
117) மணிமேகலை ஜெயக்குமார் TIN
118) மரிய பாப்பா CHE
119) மரியாள் ஜே.எஸ். TUT
120) மெஜிலா ஜோஷ்வா TUT
121) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
122) மெரிட்டா ஜெயபாலன் TCY
123) மியூரியல் புஷ்பராஜ் CHE
124) நிக்ஸன் எவர்பிரைட் TIN
125) ஆலிவ் ஜெயபாலன் CBE
126) பாக்யபாய் ஆரோன் TIN
127) பாக்ய மேரி CHE
128) பால் தங்கம் CHE
129) பெர்சி பால் பொன்சிங் TUT
130) பிங்க்லின் சந்தோஷ் CHE
131) பிரேமா பூபாலன் AVD
132) பிரேமா ஜானி TEN
133) பிரேமா ஸ்டாலின் CHE
134) பிரின்ஸ் தயாநிதி CHE
135) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
136) பிரிசில்லா தாஸ் CHE
137) பிரிஸ்கில்லாள் சசி CBE
138) ரேச்சல் ஈஸ்டர் VEL
139) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
140) ராஜபிரமீளா TPT
141) ராஜ்மேரி சார்லஸ் KER
142) ரமோலா அதிசயராஜ் TIN
143) ராணி ஃபுளோரா APM-TEN
144) ராணி பிரபாகர் TIN
145) ராணி சாமுவேல்ராஜ் CHE
146) ரத்னா டென்னிஸன் CBE
147) ரத்னாவதி பாண்டியன் CHE
148) ரெஜினா விக்டர் TIN
149) ரோஸ்லின் மார்கிரெட் CHE
150) ரூபவதி நோபிள் TIN
151) ரூத் HAPP-TCY
152) ரூத் ஜாண்ஸன் TIN
153) சலோமி மனோகர் DR. CHE
154) சாரா பாலசிங் MDU
155) சரோஜா செல்வராஜ் CHE
156) சரோஜினி எலிசபெத் CHE
157) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
158) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
159) செல்வராஜ் K. CBE
160) செல்வராணி ஆல்பர்ட் CHE
161) செல்வராணி G. CHE
162) செல்வி அமிர்தராஜ் TVR
163) ஷாலி எடிசன் CHE
164) சாந்தி ஆல்பர்ட் PCT

165) சாந்தி ஆசேர் TIN
166) சாந்தி ஜெபக்கனி KAL
167) சாந்தி ஜெயசீலன் CHE
168) சாந்தி ரோஸ் CBE
169) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
170) ஷேபா சந்தோஷ் CHE
171) ஷீபா சாம்ஸன் CHE
172) ஷீலா G. PNR-TVL
173) ஷீலா இஸ்ரேல் TCY
174) ஷெரீன் ஜெபராஜ் PAN
175) சில்வியா ஃபின்னி DR. CHE
176) சவுந்தரம் சாலமோன் CHE
177) சவுந்தரி பிரபாகர் TVR
178) ஸ்டெல்லா டேவிட் TUT
179) ஸ்டெல்லா சூசைய்யா TUT
180) ஸ்டெல்லா கனகராஜ் CHE
181) சுகிர்தா ஆல்வின் CHE
182) சுகிர்தா சின்னதுரை TIN
183) சுஜாதா சாமுவேல் CHE
184) சுமித்ரா B. CHE
185) சுந்தரி அன்பழகன் TEN
186) சுசீலா தியோடர் TCY
187) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
188) தனசீலி ஞானராஜ் CHE
189) தெல்மா ஸ்டேன்லி MDU
190) உமா குளோரி CHE
191) வனஜா ஹெர்பர்ட் TIN
192) வசந்தா அன்பன் TIN
193) வசந்தா சந்திரசேகர் CBE
194) வசந்தி கருணாகரன் CHE
195) வசந்தி வாசன் CHE
196) விஜயராணி A. CHE
197) விஜி டேனியல் CHE
198) விமலா ஜெயக்குமார் TUT
199) விண்ணரசி ரோஸ் CHE
200) வினோலியா ஜேம்ஸ் TUT
201) வினோலியா வில்சன் VAN

## வேதாகமப் போட்டி-158
## சரியான பதிலளித்தோர்

1) எலிசபெத் செல்லத்துரை CHE
2) ஞானசெல்வி மோசஸ் NJ-USA
3) கிரேஸ் பிரின்ஸ் APM
4) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
5) ஜெயசீலி கேபிரியேல் TEN
6) மேபல் கிறிஸ்டியான் CHE
7) சாரா பாலசிங் MDU
8) வினோலியா ஜேம்ஸ் TUT

## வேதாகம போட்டி–159 (யோவான்)
## சரியான விடைகள்

1. கெதரோன் யோவா:-18:1
2. கானா ஊர் யோவா:-21:2
3. அந்திரேயா யோவா:-1:40,41
4. தோமா-இயேசுவிடம் யோவா:-20:28
5. மகதலேனா மரியாள் யோவா:-20:11
6. மார்த்தா-மரியாவிடம் யோவா:-11:28
7. சமாரியாவின் ‘சீகார்’ யோவா:-4:5,6
8. கபாலஸ்தலம் யோவா:-19:17
9. சரி - யோவா:-6:63
10. சரி - யோவா:-1:18
11. தவறு - யோவா:-3:20
12. சரி - யோவா:-4:37
13. ஈ - நீதியின் யோவா:-7:24
14. ஈ - கூலியாள் யோவா:-10:13
15. இ - அன்னா யோவா:-18:13
16. அ - தேவகுமாரன் யோவா:-5:25
17. யூதா-ஸ்காரியோத் யோவா:-13:26
18. மேல்விலாசம்-ந.இ.யூ.ரா யோவா:-19:19
19. ஜீவ-தண்ணீர் யோவா:-4:10-14
20. பெதஸ்தா குளம் யோவா:-5:2, 3

# வேதாகம போட்டி-160

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-02-2024

**வேத–பகுதி: அப்போஸ்தலர் முழுவதும்**

1. உலகெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என ஆவியானவரால் அறிவித்தது யார்?
2. ‘இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன்; நீங்கள் யார்?’ என சொன்னது யார்?
3. ‘நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள்’ - யார்? யாரிடம்? சொன்னது?
4. ஜெபம்பண்ணும்படி, ஆறாம் மணி நேரத்தில் மேல்வீட்டில் ஏறியது யார்?
5. தன் மனைவி அறிய நிலத்தின் கிரயத்தில் ஒருபங்கை வஞ்சித்து வைத்தது யார்?
6. யாரைக்குறித்து, பரிசுத்த ஆவியானவர் தாவீதின் வாக்கினால் முன் சொன்னார்?
7. தீர்க்கத்தரிசனஞ்சொல்கிற கன்னியாஸ்திரீகளாகிய 4குமாரத்திகள் யாருக்கு இருந்தனர்?
8. ‘தேவனோடு போர் செய்கிறவர்களாய் காணப்படாதபடி பாருங்கள்’- சொன்னது யார்?
9. ‘தேவனால் எழுப்பப்பட்டவரோ அழிவைக் காணவில்லை’ - **சரியா, தவறா**?
10. ‘வாங்குகிறதைப் பார்க்கிலும் எடுக்கிறதே பாக்கியம்’ - **சரியா தவறா**?
11. ‘தேவன் அசுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே’ - **சரியா தவறா**?
12. ‘அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்’ - **சரியா தவறா**?
13. உன்னதமானவர் ‘**இவைகளால்**’ செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்:
அ) கற்களால் ஆ) செங்கற்களால் இ) கைகளால் ஈ) மரங்களால்
14. ‘**இவன்**’ பிரசங்கம் நடத்தினவனானபடியால் இவனை மெர்கூரி என்று சொன்னார்கள்:
அ) பிலிப்பு ஆ) பவுல் இ) பேதுரு ஈ) யாக்கோபு
15. ‘**இவர்கள்**’ ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்:
அ) சீடர்கள் ஆ) விசுவாசிகள் இ) ஆசாரியர்கள் ஈ) அதிகாரிகள்
16. ‘**இவர்களுக்கு**’ கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிவதே அவசியம்:
அ) தூதருக்கு ஆ) ஆசாரியருக்கு இ) மனுஷருக்கு (ஈ) பிசாசுகளுக்கு
17. ராஜ உடையில் ஒரு ராட்சஸன்! அரியாசனத்தில் ஒரு அரக்கன்! புகழில் மயங்கி புழு-புழுத்து செத்தவன்! தூதன் அடிக்க துடி-துடித்து செத்தவன்? **யார் இவன்?**
18. சிலை வடிக்கும் சிற்பி! கோவில் செய்யும் கொல்லன்! கலவரத்தின் காரணன்! தியானாள் தேவியின் மித்துரு! திருவசனத்தின் சத்துரு! **இவன் யார்?**
19. அநீதிக்கு கூலி பெற்ற அரக்கன்! அக்கெல்தமாவின் அதிபதி இவன் கிறுக்கன்! கொலைமரத்தில் தலையை விட்ட கொடூரன்! **இவன் யார்?**
20. வீடு இது வீடு, விசுவாசியின் வீடு! வாடகை வீடு இது, வருடம்-2 வாழ்ந்த வீடு! ரோமாபுரி வீடு இது ரோம-பிரஜை வீடு! சுவிசேஷ வீடு இது பிரசங்கத்தின் வீடு! **யார் வீடு இது?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-02-2024 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

EPISODE-57

பாகம்-57



SIS.C. ANGEL

யாக்கோபின் பங்காயிருக்கிறவர் சர்வத்தையும் உருவாக்கினவர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம். எரே–10:16

The portion of Jacob is the creator of all things; the 'Lord of hosts' is His name. Jer-10:16

## The portion of Jacob - Ha khay-lek Yahakob

## யாக்கோபின் பங்காயிருக்கிறவர்

ஹா கேய்லெக் யாஹ்கோப்

பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கத்தரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம்பற்றின தேவனின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு பிப்ரவரி மாத ஸ்தோத்திர வாழ்த்துக்கள்.

**சங்-119:57** கர்த்தாவே! நீரே என் பங்கு; உமது வசனங்களைக் கைக்கொள்வேன்.

**என்னென்ன பங்குகள்? அவற்றை எதற்காகக் கொடுக்கிறார்?**

இதுவரை கர்த்தருக்காக நம்மால் இயன்ற ஊழியத்தை செய்துவந்தோம். அதற்கு ஏற்ற பலனை ஊழியத்திலும் குடும்ப வாழ்விலும் கர்த்தர் தந்தருளப்போகிறார்.

**யோசு-14:1,2,5,9,15** நிந்தைகள் அவமானங்கள் மத்தியில் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றின நமக்கு, நாம் கால்-மிதித்த தேசத்தை (தெருக்கள், ஊர்கள், பட்டணங்கள், நாடுகள்) என வகை-வகையாகப் பிரித்து, எபி-9:17ன் படி அவருடைய இரத்தத்தினால் முத்திரையிட்டு நம் கரங்களில் தருகிறார். போக்கு-வரத்தில், சரீர-பெலனால் நிரப்பி ஏனாக்கிய அர்பா-வாகிய பிசாசின் பிடியிலிருந்து ஆத்துமாக்களை விடுவிக்கிற வல்லமையின் வரங்களால் (anointing with the powerful gift of exorcism) நம்மை அபிஷேகம் செய்கிறார்.

**யோசு-17:5,17** நாம் ஜனம் பெருத்தவர்கள் எனவே, மஹா பராக்கிரமத்தால் மறுரூபப்படுத்தி மலைதேசத்தையும் நம் கரங்களில் கொடுக்கப்போகிறார்.

**உபா-33:23** கர்த்தருடைய தயவினாலே (உலக ஆசீர்வாதத்தால்) திருப்தி அடைந்து, நிரம்பி வழிந்து, மேற்றிசையையும் தென்திசையையும் சுதந்தரித்துக் கொள்ளும்படி வழிகளைத் திறக்கிறார். அல்லேலூயா, ஆமென்.

**ஜெபம்:** யாக்கோபைச் சந்தித்து, ஆசீர்வாத உடன்படிக்கை செய்த சர்வவல்ல தேவனே! உம்மைத் துதிக்கிறோம். நீர் எங்களை ஆசீர்வதிப்பதின் விளைவாக (ஆதி-41:34, நெகே-8:44) சபையில் தசமபாகங்களை, ஆத்துமாக்களை பங்கு பங்காக அர்ப்பணிப்போம். இரட்சிப்பின் குடும்பத்தாருக்கு நீர் சொன்ன நல் வார்த்தைகளில் ஒன்றும் தவறிப்போகவில்லை; எல்லாம் நிறைவேறிற்று. இயேசுவின் நாமத்தில், ஆமென் பிதாவே!

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தொகுப்பு: சகோ.C. ஏஞ்சல் B.Sc திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்-துளி வேத வசனக் கதை-153

# கையின் பிரயாசங்களை ஆசீர்வதிக்கும் தேவன்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

அயர்லாந்து தேசத்தில் மார்ஷல் என்னும் தெய்வ பக்தியுள்ள வியாபாரி வாழ்ந்துவந்தார். ஒருநாள் அவர், அருகிலுள்ள நகருக்கு சென்று தனது வியாபாரத்தில் தனக்கு வரவேண்டிய பெருந்தொகையை வசூல் செய்துகொண்டு மாலை நேரத்தில் வீட்டிற்கு குதிரையில் சென்றுகொண்டிருந்தார். வழியில், ஒரு பெரிய காட்டுப்பகுதி இருந்தது. அப்பகுதியில் மார்ஷல் வந்துகொண்டிருந்தார்.

அப்போது, திடீரென பெரும் மழை பெய்ய ஆரம்பித்தது. அதனால் மனம் உடைந்த மார்ஷல், ‘‘ஆண்டவர் என்னை கைவிட்டு விட்டாரோ? நான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் எல்லாம் நனைந்து போகுதே’’ என யோசித்துக்கொண்டிருந்த வேளையில் 3திருடர்கள் அவரை வழிமறித்து அவரிடமிருந்த மொத்த பணத்தையும் கொள்ளையடிக்க முயன்றனர். அவர்களில் ஒருவன் மார்ஷலிடம், ‘‘உன்னிடம் உள்ள எல்லா பணத்தையும் தந்துவிடு இல்லாவிடில் உன்னைக் கொன்று விடுவோம்’’ என மிரட்ட, மற்றொரு திருடன் தனது கைத்துப்பாக்கியால் அவரை சுட்டுத்தள்ள முயற்சித்தான். துப்பாக்கிக் குண்டுகள் மழையில் நனைந்துவிட்டதால் துப்பாக்கியால் சுடமுடியவில்லை. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்ட மார்ஷல் குதிரையை வேகமாக ஓட்டிக்கொண்டு தனது வீட்டை சென்றடைந்தார்.

பின்னர் அவர் இயேசு தனக்கு செய்த அதிசயமான காரியங்களை நினைத்து அவருக்கு நன்றி செலுத்தினார். அதிக மழை பெய்த காரணத்தினால் ஆண்டவரை சந்தேகித்து முறுமுறுத்தபோதும் ஆண்டவர் அதிசயமாக மழையை அனுப்பி தன் உயிரையும் தனது பணத்தையும் பாதுகாத்ததை எண்ணி அவருக்கு நன்றி செலுத்தினார். ‘‘இனிமேல் பிரச்சனைகள் வரும்போது நான் ஆண்டவருக்கு விரோதமாக முறுமுறுப்பதை விட்டுவிடுவேன்’’ என தீர்மானமும் எடுத்து உயிருள்ள சாட்சியாய் வாழ்ந்தார்.

பிரியமானவர்களே! நம் வாழ்விலும், பிள்ளைகளின் கல்வி, வேலைவாய்ப்பு, திருமணம், நிலம்-வீடு-தொழில் தொடர்பான காரியங்களில் மார்ஷலுக்கு நேர்ந்ததுபோல் சில சோதனைகள் வரலாம். அந்நேரங்களில் நாம் சோர்ந்துபோகாமல், ‘கர்த்தர் நம் நன்மைக்காக யாவற்றையும் செய்து நம்மை மேன்மையான நிலைக்கு வழிநடத்துவார்’ என்ற விசுவாசத்தோடு வாழுவோம். நம் வாழ்வில் என்ன வந்தாலும் எது நேர்ந்தாலும் ஆண்டவர் இயேசு நம்மைக் கைவிடாமல் பாதுகாத்து, ஆசீர்வதித்து வழிநடத்துவார் என்பதில் சந்தேகம் இல்லை. கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென். வேதம் இவ்விதம் சொல்லுகிறது:


சகோ. அசரியா

என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசா–55:8

சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள் அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள். 1கொரி–10:10

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, ‘Ratchippu’ Tamil Christian Monthly Magazine, Chennai-93. Mobile: 9962924900




EPISODE 19

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு.. இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-4 பகுதி-4

**4. கிறிஸ்தவப் பணியின் ஆரம்பம்**

**4. மதச்சார்பற்ற குருமார்களின் பணி**

கோவா, கொச்சியைத் தவிர பிற போர்ச்சுகீசிய குடியேற்றங்களில் மதச்சார்பற்ற குருமார்கள் அதிகம் இல்லை. பொதுவாக மூன்று வருட காலத்திற்கு அரசு அதிகாரிகளைப் போல விகார்களும் முறைப்படி நியமிக்கப்பட்டனர்.

1514ஆம் ஆண்டிற்கான கன்னனூரின் விகாரி அஃபோன்சோ வெல்ஹோ, அந்த மையத்தில் இருக்கும் இந்திய கிறிஸ்தவர்களைப் பற்றிய ஆர்வமூட்டும் தனது பகுப்பாய்வைக் கொடுக்கிறார். 100திருமணமான போர்த்துகீசியர்களைத் தவிர, மொத்தம் 344 பேர் இருந்தனர்; இதில் 85முஸ்லிம்கள், 8நாயர்கள்; இவர்களுடன் 22குழந்தைகள் 160தாழ்த்தப்பட்ட இன மக்கள், போர்த்துகீசியரின் 13குழந்தைகள், உள்ளூர் பெண்களை மணந்த மற்றும் திருமணமாகாத போர்த்துகீசியர்களின் 24குழந்தைகள் (அடிமைகள் அல்லது பிற பெண்களுடன் ஒழுங்கற்ற தொடர்பு களை உருவாக்கியவர் குழந்தைகள்) இருந்தனர்.

நகரில் இன்னும் பலர் கிறிஸ்தவர்களாக மாறியிருக்கலாம் என விகாரி தெரிவிக் கிறார். இந்து அல்லது முஸ்லீம் அடிமைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை ஆளுநர் தடை செய்யவில்லை. அத்தகைய ஞானஸ்நானம் சண்டைகளுக்கு வழிவகுக்கும் என்ற அடிப்படையில் அடிமைகளின் உரிமையாளர்கள் அல்லது சட்ட உரிமையாளர்கள்; மதமாற்றத்தை தடை செய்ய உரிமை உண்டு என விகாரி தெரிவிக்கிறார். மேலும் வாழ்வாதாரத்தை இழந்த அடிமைகளின் அலட்சியம் மற்றும் அவர்களின் அவல நிலை சகிக்க முடியாத அழுத்தத்தை அவர்களிடம் ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், அத்தகைய மதமாற்றங்கள் நேர்மையானதாக இருக்க வாய்ப்பில்லை என்பதும் கருத்தில் கொள்ளவேண்டிய ஒன்றுதான். மதச்சார்பின்மையின் தன்மையை மதிப்பீடு செய்வது எளிதானது

அல்ல. அக்கால மதகுருமார்களிடம் தொடர்ந்து காணப்பட்ட அதிருப்தியின் நான்கு ஆதாரங்கள் அல்லது அவர்களுக்கு எதிரான புகார்கள் பின்வருமாறு:

1. சோம்பேறித்தனம்
2. அறியாமை
3. காழ்ப்புணர்ச்சி
4. உலக ஆதாயம் தேடும் போக்கு

ஆனால், இதில் பிஷப்கள் அல்லது மத அமைப்புகளின் உறுப்பினர்களிடமிருந்து வந்த பல புகார்கள் பொறாமையை வெளிப்படுத்தும் அம்சமாகவே உள்ளது. மதச்சார்பற்றவர்கள் போப்களால் வழங்கப்பட்ட சலுகைகளை வெறுத்தனர். பொதுமக்கள், மதச்சார்பற்றவர்களின் தளர்ச்சியை அறியாமை என்றும் அவர் களின் மிகவும் கடினமான தரநிலைகள் எனவும் நினைக்காமல் மிகவும் சாதகமற்ற முறையில் எதிர்த்தனர். தவறு செய்த பிரான்சிஸ்கன்கள் தீவிரமான கண்டன நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டார்கள். தவறு செய்தவர் மதச்சார்பற்ற மதகுரு மார் வகையை சேர்ந்தவராக இருந்தால் அவரிடமிருந்து அதிகமாக எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை.

தேவாலய சேவைகளை நிறைவேற்றுவதற்கு குறைந்தபட்ச லத்தீன் மொழி அறிவு அவசியம் என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், பல தேவாலயங்களின் பேரிஷ்-பாதிரிகளுக்கு லத்தீன் மொழி-அறிவு மிகக் குறைவாகவே இருந்ததாக தெரிகிறது. ஆகவே, திருச்சபையில் பேரிஷ்-பாதிரியார்தான் பிரசங்கிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படவுமில்லை கட்டாயப்படுத்தப்படவுமில்லை; மாறாக, பொதுவான பிரசங்க-கடமை நிறைவேற்றும் பணி பிரான்சிஸ்கன் மற்றும் டொமினிகன்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது.

ஐரோப்பிய சமூகங்களில் மறுமனையாட்டியுடன் வாழும் பழக்கம் நிலவியதால், ஒற்றை ஆண்கள் தனியாக வாழும்போது மற்றும் தனிமைப்படுத்தப்பட்டு, சாதகமற்ற கால நிலையால் சோர்வடைந்து இருந்த நிலையில் மேற்கத்திய பிரம்மச்சரியத்தின் தேவை இந்தியாவில் குடியேறியவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியது. கிழக்கில் உள்ள மதகுருமார்களின் நடத்தையைப் பொறுத்தவரை பெருநகர மதகுருமார்களை விட உயர்ந்தவர்களாக விளங்கினர்.

எனினும், ஒரு மிஷனரி சக்தியாக திகழ்ந்த போர்ச்சுகல் அரசு, மதத்தின்-நன்மை மற்றும் போர்ச்சுகல் நாட்டின் புகழ் கருதி பொது பாதிரியார்கள் பலரை ‘தீய-வாழ்க்கை’ அல்லது ‘முன்மாதிரி-இல்லாமை’ போன்ற காரணங்கள் காட்டி போர்ச்சுகலுக்கு திருப்பி அனுப்பியது என அனைத்து பதிவுகள் பற்றிய பரந்த அறிவைக்கொண்ட ‘டா சில்வா ரெகோ’ தனது கருத்துரையில் குறிப்பிடுகிறார்.

மொழி அறிவின்மை காரணத்தினால் போர்ச்சுகல் மதகுருமார்கள் செய்த சொற்பொழிவின் (பிரசங்கத்தின்) அர்த்தத்தைத் தவறவிட்டுவிட்டு, திரிக்கப்பட்ட கணக்கை மொழிபெயர்ப்பாளர் கொடுத்திருக்கக்கூடும்.உண்மையைச் நாம்

சொல்லப்போனால், இருமொழி தெரிந்த போர்த்துகீசியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பெரும்பாலான இடங்களில் கொச்சி, தூத்துக்குடி, நெகப்படம் போன்ற உள்ளூர் மக்களின் ஆதரவாலும் மதச்சார்பற்ற குருமார்கள் உதவியினாலும் மாத்திரமே கிறிஸ்தவ குருமார்களின் பணி-விவரங்கள் அடங்கிய குறிப்புகள் கிடைத்தன.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope's College, Sawyerpuram) Thiruvanmiyur, Chennai. South India

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

# ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் பிப்ரவரி - 2024

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 09-02-2024 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 16-02-2024 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 23-02-2024 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**MOBILE:** 9962924900/7871676100
**WHATSAPP:** 9789914463/7871676100
**E-MAIL:** sjddharmaraja@gmail.com
**POSTAL ADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93
**WEBSITE:** www.ratchippu.com

**BANK DETAILS FOR SENDING OFFERTORY:**

NAME: DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO: 601071548.
BANK AND BR.: INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE: IDIB000N122.
BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.
GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:
REV. DHARMARAJA SJD: 9789914463

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

# ஜெப-ஜன்னல் ஜெப-குறிப்புகள்

கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட.... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட.... நடைபெறவிருக்கும் இந்திய பாராளுமன்றத் தேர்தல்கள் நேர்மையாக நடைபெற... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கிப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோ ப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், REV. கருணாகரன், திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், அன்னாள் ஜெபக்கனி, திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. ஜெயா சாமுவேல், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், DR.ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. லிஸி ஜீவா வசந்தி, திருமதி. கிரேஸ் பொன்மணி ரெக்ஸ், திருமதி. டெய்ஸி ஜெபதாஸ், திருமதி. பியூலா ஜேசுராஜன். திரு. ஜே.ஆர். டேவிட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. ஞானசுந்தரி நாகராஜன், திருமதி. மெர்ஸி தனராஜ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. ராஜ்மேரி சார்லஸ் ஆகியோருக்காக... அவர்களது குடும்பத்தாருக்காக...

9) திருமதி. தீபா அவர்களின் மரணத்தினிமித்தம் துயருறும் குடும்பத்தார் ஆறுதல் தேறுதல் அடைய... திருமதி. தீபா அவர்களின் ஆத்தும இளைப்பாறுதலுக்காக...

# நன்றி பலி நன்றி பலி

**திரியேகருக்கு நன்றிபலி படைப்போம் - Let us give thanks to the Triune God**

திருமதி. சேர்டியஸ் தாவீது அவர்களை பிரசவ காலத்தில் பாதுகாத்து, சுக-பிரசவத்தில் அருமையான ஆண் குழந்தையை பெற்றெடுக்க கிருபைசெய்த நம் கர்த்தாதி கர்த்தருக்கு அனந்த கோடாகோடி நன்றிபலிகளை செலுத்துவோம்.

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th February 2024.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.



# செய்தித்துளிகள்

1. நிலவில் தரையிறங்கிய 5வது நாடு என்ற பெருமையை பெற்றது ஜப்பான். 144நாட்கள் பயணித்து நிலவில் இறங்கிய 'ஸ்லிம்' லேண்டரில் சூரிய-மின்கல கோளாறு ஏற்பட்டதால் அது 'பகுதி' வெற்றியை பெற்றுள்ளது என ஜப்பான் தகவல்.

2. இந்தியாவின் 75வது குடியரசு தின அணிவகுப்பில் பிரெஞ்சு ராணுவத்தின் 'லிஜியோனியர்' பிரிவினர் 95பேரும் இசைக்குழுவினர் 33பேரும் பங்கேற்பு. பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரன் தலைமை விருந்தினராக பங்கேற்பு.

3. ஆவடி-திருவள்ளூர் ரயில் தடத்தில் கடந்த ஒரு ஆண்டில் கவனக்குறைவோடு தண்டவாளங்களை கடந்த 113பேர் (ஆவடி-பகுதி 62பேர் திருவள்ளூர்-பகுதி 51பேர்) ரயில்கள் மோதி உயிரிழந்துள்ளதாக ரயில்வே போலீஸார் தகவல்.

4. தமிழ்நாட்டில் ஏப்-2023 முதல் டிச-2023 வரையிலான 9மாதங்களில் 11,704மில்லியன் யூனிட் காற்றாலை மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது ஏப்-2022 முதல் டிச-2022 வரையிலான மின் உற்பத்தியைவிட அதிகமாகும்.

5. உலக பேட்மிண்டன் ஆண்கள் இரட்டையர் தரவரிசையில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை முதல் இடத்தை பிடித்தது. சீனாவின் லியாங் வெகேங் - வாங் சாங் இணை 2ம் இடத்துக்கு சரிந்தது.

Posted on: 10th February 2024

To

# தபசு காலம்–2024

**BLESSED LENT**

**லெந்து அல்லது தபசு** காலம் என்பது சாம்பல்-புதன் முதல் ஈஸ்டர்-ஞாயிறுக்கு முந்தின நாள்வரை உள்ள 46நாட்களில் 6-ஞாயிறுகளையும் தவிர்த்தபின் மீதமுள்ள 40நாட்கள் ஆகும். இயேசு உயிர்த்தெழுந்த திருநாள் ஞாயிறு-அன்று வருவதால் ஞாயிற்றுக் கிழமைகள் கணக்கிடப்படுவதில்லை. எபிரேய காலண்டர்படி சேபாத் (சக:1:7), ஆதார் (எஸ்:3:7), நிசான் (நெகே:2:1) மாதங்களும், ஆங்கில காலண்டர்படி பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களும், தமிழ் காலண்டர்படி மாசி, பங்குனி, சித்திரை மாதங்களும் லெந்து அல்லது உபவாச காலமாக கணக்கிடப்படுகிறது.

If undelivered Please return to:
**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2–A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.